# சார்பு நீதிமன்றம், செஞ்சி

**அ.வ.எண்.131/2021** **நாள்.26.03.2025**

2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சகாயநாதன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | வனத்தையன் | சாதி | |
| கிராமம் | சிறுநாம்பூண்டி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 56 |

**வா.சா.1**

**1,3,4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

5ல் 1 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து என் அம்மா காணிக்கைமேரிக்கு உரிமையானது. என் அம்மா காணிக்கைமேரி 2005ல் இறந்துவிட்டார். என் தந்தையின் பெயர் வனத்தையன். காணிக்கைமேரிக்கு ஜோஸ்பின்மேரி, சைமன், நான், டான்போஸ்கோ, வினோமேரி, பெலிக்சா மேரி ஆகியோர் வாரிசுகள் ஆகும். காணிக்கைமேரி யாருக்கும் எந்தவித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார். அதன்பிறகு நானும், என் தந்தையும், என் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ந்து சொத்தை அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். என் தந்தை உயிரோடு இருந்த காலத்தில் எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை என்றால் சரிதான். சைமன் என்பவர் 1983 முதல் இதுநாள் வரை உயிருடன் இருக்கிறாரா என்ற விவரம் எதுவும் தெரியவில்லை. அதுசம்மந்தமாக ஏதாவது புகாரோ (அ) வழக்கோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அனந்தபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து மனு ஏற்பு ரசீது கொடுத்துள்ளார்கள். அவருக்கும் இந்த வழக்கு சொத்தில் பாகம் உண்டு என்றால் சரிதான். காணிக்கைமேரியின் வாரிசுகளுக்கு பாகம் உண்டு என்றால் சரிதான். வனத்தையன் 2020ல் இறந்துவிட்டார். வனத்தையன் யாருடைய பராமரிப்பில இருந்தார் என்றால் அனைவருடைய பராமரிப்பில் இருந்தார். அனைவருக்கும் தாவா சொத்தில் பாகம் உண்டு.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)